**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**RLTOP. NO.1/2023**

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் ம.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 10.10.2025</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜகோபால் (PW– 1) | வயது | : | 48 /2025 |
| த/க பெயர் | : | திரு. கண்ணன் | தொழில் | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கில் மீண்டும் சாட்சியம் அளிக்கும்போது என்னன்ன ஆவணங்கள் குறியீடு செய்தேன் என்றால் தாவா கடையின் கிரய சான்று, பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் வழக்குரை. கிரய பத்திரத்தில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1160 சதுரடி ஆகும்.
2) தாவா கடையின் கிரய பத்திரத்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கொடுக்காமல் தற்போது தான் அந்த ஆவணத்தை குறியீடு செய்தேன் என்றால் சரிதான். காரணம் என்னவென்றால் அப்போது வங்கியில் அடமானத்தில் ஆவணம் இருந்ததால்தாக்கல் செய்யவில்லை. அடமானம் வைத்திருந்தாலும் நகல் எடுத்து தாக்கல் செய்திருக்கலாம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தவற்கான உரிமையை தக்க வைத்து கொள்ளவதாக மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
3) வழக்கு தாக்கல் செய்யும்போதே தாவா கடையின் ஆவணத்தை தாக்கல் செய்யாததால் எனது தரப்பு வழக்கினை நிரூபிக்கவில்லை என்றும் பின்னிட்டு குறுக்கு விசாரணையில் கேட்டதன் பேரில அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

4) தாவா கடையை எதிர்மனுதாரருக்கு மாத வாடகை ரூபாய் 8000 க்கு வாடகை விட்டதாக மனுவில் சொல்லியுள்ளதால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாய்மொழியாக ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கை என்பதால் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. வாய்மொழி எப்போது எற்பட்டது என்றால் பத்திரப்பதிவு செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே ஏற்பட்டது.
5) தாவா சொத்திற்கான உரிமை மூலம் இல்லாமல் ஏற்படுத்திக்கொண்ட வாய்மொழி ஒப்பந்தமானது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விபரத்தினை கிரய ஆணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வீட்டு கதவிலக்கம் என்று கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அது வீடா அல்லது கடையா என்றால் வீடு, படிவம் 3 இல் கடை என்று குறிப்பிடாமல் வீடு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.
6) இணைப்பு 1 ஏ வில் ஆர்.சி.சி கட்டிடம் விஸ்திரணம் எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 750 சதுரடி ஆகும்.

**எதிர்மனுதாரரின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

District Munsif
Mannargudi.